**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE'S, HOSUR.**

O.S.13/2009 தேதி 10.06.2025

பி.சா. 1 – முனி ரெட்டி

**பி.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. வாதியும், 2ம் பிரதிவாதியும் எனது உடன் பிறந்த சகோரர்கள் என்றால் சரிதான். 3, 4 பிரதிவாதிகள் எனது உடன் பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். வாதி தாவா ஏ ஷெட்யூலில் 4 கிராமங்களில் உள்ள சொத்துக்களை காட்டியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி தாவா ஏ ஷெட்யூல் சொத்துக்கள் புஞ்சை, நஞ்சை சொத்துக்கள் என்றால் சரிதான். பி ஷெட்யூல் சொத்துக்கள் நல்லூர் கிராமத்தில் ஒசூர் தாலுக்காவில் அமைந்துள்ளது என்றால் சரிதான். ஏ ஷெட்யூல் சொத்துக்கள் தேன்கனிக்கோட்டை தாலுக்காவில் அமைந்துள்ளது என்றால் சரிதான். தாவா ஏ ஷெட்யூல் சொத்துக்கள் பிதுர்ரார்ஜிய சொத்துக்கள் என்றால் சரிதான். பி ஷெட்யூல் சொத்துக்களில் உள்ள 1 முதல் 4 இலக்க சொத்துக்களுக்கு எனது தகப்பனார் கிரய ஆவணம் உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.5 முதல் 15 வரையான ஆவணங்கள் எனது மனைவி பெயரில் உள்ள ஆவணங்கள் என்று சொன்னால் சரிதான், நான் அரசு ஊழியராக கர்நாடக மாநிலத்தில் பணி புரிந்து வந்ததால் உடனடியாக அரசாங்கத்திடம் அனுமதி பெற்று சொத்துக்கள் வாங்க முடியாது என்பதால் பி.சா.ஆ.,1 முதல் 4 ஆவணங்களை எனது தகப்பனார் பெயரிலும், பி.சா.ஆ.5 முதல் 15 வரையான ஆவணங்களை எனது மனைவி மற்றும் மகள்கள் பெயரிலும் வாங்கினேன் என்று சாட்சி தன்னிச்சையாக சாட்சியமளிக்கிறார்.

2. நான் கர்நாடகா மாநிலத்தில் Joint Commissioner ஆக Commercial Tax அலுவலகத்தில் வேலை பார்த்து பணி ஓய்வு பெற்றேன். 05.01.1994 ல் பி.சா.ஆ.28 கடிதம் மூலமாக ஒசூர் தாலுக்காவில் எனது மனைவி பெயரில் நிலம் வாங்குவதற்காக Commissioner இடம் அனுமதி கேட்டேன் என்றால் சரிதான். ஆனால் அனுமதி மறுக்கப்பட்டது என்றும் அதனால் எனது தகப்பானார் பெயரில் சொத்து வாங்கினேன் என்றும் சாட்சியமளிக்கிறார். எனது தகப்பனார் பெயரில் சொத்து வாங்குவதற்கு அனுமதி கேட்கவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.28 ல் அலுவலக முத்திரை இல்லை

என்றால் சரிதான், அப்படி அலுவலக சீல் போடும் பழக்கமில்லை என்கிறார். நான் பொய் சொல்கிறேன் என்றும் பி.சா.ஆ.28 ஐ நான் தயார் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

3. பி.சா.ஆ.25, 26, 27 ஆவணங்களை எதற்காக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் எனது மனைவிக்கு வருமானம் உள்ளது என்பதை காண்பிப்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 3 ஆவணங்களிலும் சம்பந்தப்பட்ட அலுவலக முத்திரை இல்லை என்றால் சரிதான், அவர் பிரைவேட் காண்டிராக்டர் என்பதால் சீல் இல்லை என்கிறார். பி.சா.ஆ.25 முதல் 27 வரையான ஆவணங்கள் பொய்யாக இந்த வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.16 உயில் ஆவணம் பதிவுசெய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். ஆனால் நோட்டரி அட்டெஸ்ட் செய்யப்பட்டுள்ளது. எதை காட்டி பி.சா.ஆ.16 ல் நோட்டரி அட்டெஸ்ட் வாங்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது எனது தகப்பனாருக்கு தான் தெரியும். எனது தகப்பனார் கையொப்பம் போடுவாரா கைரேகை வைப்பாரா என்றால் கைரேகை தான் வைப்பார் ஆனால் ஒரு முறை கையொப்பம் செய்து ஆவணம் ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரிதான். எனது தகப்பனார் நல்லுரில் சொத்து வாங்கும் போது கையொப்பம் போட்டாரா கைரேகை வைத்தாரா என்றால் எனக்கு தெரிந்த வரை அவர் கைரேகை தான் செய்தார் என்கிறார். இந்த உயில் ஆவணம் எழுதும் போது உடன் சென்றேனா என்றால் இல்லை. நான் வெளியூரில் இருந்தேன் என்கிறார்.

4. உயில் ஆவணத்தில் உள்ள ஸ்டாம்ப் பேப்பரை எப்போது யார் வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியாது. உயில் எழுதி வைத்திருப்பதாக எனது தகப்பானார் எப்போதாவது சொன்னாரா என்றால் இல்லை, சாட்சிகள் சொன்னார்கள் என்கிறார். எந்த சாட்சி உயிலை பற்றி என்னிடம் சொன்னார் என்றால் கோபால் ரெட்டி என்கிறார். எனது தகப்பனார் இறந்து எத்தனை வருடங்கள் கழித்து உயிலை பற்றி கோபால் ரெட்டி என்னிடம் சொன்னார் என்றால் எனது தகப்பனாரின் இறுதிசடங்கு முடிந்து ஒரு வாரத்தில் சொன்னார் என்கிறார். பி.சா.ஆ.16 உயில் ஆவணம் கலர் ஜெராக்ஸ் என்றும், அசல் உயில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரிதான். அசல் உயில் ஆவணம் வங்கியில் உள்ளது என்கிறார். உயிலை யார் எழுதினார்கள் என்றும் யார்

யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றும் கேட்டால் சடகோபன் என்பவர் உயிலை எழுதியுள்ளார், கோபால் ரெட்டி, கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்கிறார். உயில் ஆவணத்தை எழுதிய நபரின் பெயர் ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றும், அட்டெஸ்ட் செய்த நபர் பெயர் தான் சடகோபன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரிதான். பி.சா.ஆ.16 உயில் ஆவணம் பாங்க் ஆப் பரோடா வங்கியில் உள்ளது என்று பி.சா.ஆ.17 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பி.சா.ஆ.17 ல் ரூ.2,20 இலட்சம் கடன் பெற்றிருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான், கடன் பெறுவதற்கு பி.சா.ஆ.16 உயில் ஆவணத்தை கடன் பெறுவதற்காக வங்கியில் சமர்பிக்கப்பட்டுள்ளது. நான் 2007 ல் மேற்படி கடனை பெற்றுள்ளேன் என்றும் அப்போதே இந்த உயில் ஆவணத்தை சமர்ப்பித்தேன் என்கிறார். 2007 ல் கடன் வாங்கிய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பி.சா.ஆ.17 ல் சொல்லப்பட்டுள்ள கடன் எந்த வருடத்தில் வாங்கப்பட்டது என்றால் 2020 ல் புதுப்பிக்கப்பட்ட கடன் என்கிறார். பதிவு செய்யப்படாத உயில் ஆவணத்தின் பெயரில் ரூ.2,20 இலட்சம் கடன் கொடுக்கமாட்டார்கள் என்றும் வங்கி அதிகாரியின் துணையோடு பி.சா.ஆ.17 ஆவணத்தை பொய்யாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.16 உயில் ஆவணம் மோசடியானது என்றும் நான் சொல்வது போல் எனது அப்பா உயில் ஆவணம் எழுதி வைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

5. பி.சா.ஆ.16 ல் உள்ள சொத்துக்கள் தாவா பி ஷெட்யூல் என்றால் சரிதான். பி.சா.ஆ.16 ல் எனது தகப்பனார் கனரா வங்கியில் கடன் வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் அந்த கடன் ஷெட் போடுவதற்காக வாங்கியதாக சொல்கிறார். பி.சா.ஆ.16 ல் சுயரார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று எனது தகப்பனார் எழுதியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் அந்த சொத்துக்களை நான் தான் கிரயம் வாங்கினேன் என்கிறார். எனது தகப்பனார் உயில் ஆவணத்தில் சுயரார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொல்லியுள்ளது தவறு என்று நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பி.சா.ஆ.16 உயில் ஆவணம் இந்த வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு தள்ளிவைக்கப்படுகிறது.

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Subordinate Judge,
Hosur